தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

திருவள்ளுவர் ஆண்டு 2053,
மார்கழி/தை
டிசம்பர் 2022 - செய்தி மடல் 31

பொறுப்பாசிரியர்:
**குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)**

Websites : https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Google Groups : Mintamil Google Group

Facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar
மின்தமிழ்-minTamil

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

*(அதிகாரம்: இனியவைகூறல்; குறள்: 913)*



அனைவருக்கும் வணக்கம்.

அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டின் இறுதி மாதமாகிய டிசம்பர் மாதத்தில் தமிழ் மரபு அறக்கட்டளையின் பல்வேறு நிகழ்வுகள் உலகத் தமிழ் மற்றும் வரலாற்று ஆர்வலர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவை பற்றிய சுருக்கமான செய்திகளை உங்களோடு திணை இதழ் வழியாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் மலேசியாவில் பினாங்கு தொடங்கி பின்னர், கேரித்தீவு, கிள்ளான் பகுதிகளில் என நான்கு பள்ளிக்கூடங்களில் மாணவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி பற்றிய பயிலரங்கங்களைத் தமிழ் மரபு அறக்கட்டளையினர்


தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

வழங்கினோம். ஏறக்குறைய ஆயிரம் மாணவர்களும் பள்ளி ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டனர்.




மலேசியா பயணத்தை முன்னிட்டு அங்குப் பதிவு செய்யப்பட்ட சில வரலாற்றுப் பதிவுகள் காணொளிகளாக இதே மாதத்தில் வெளியிடப்பட்டன.

இதே டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டின் சென்னையில் இரண்டு நாள் வரலாற்றுப் பயிலரங்கம் நடைபெற்றது. முதல் நாள் பண்டைய வட்டெழுத்து பயிலரங்கமும், இரண்டாம் நாள் ஓலைச்சுவடி வாசித்தல் பயிலரங்கும் நடைபெற்றன. ஏறக்குறைய பதிவு செய்து கொண்டு 90 மாணவர்கள் இந்த பயிலரங்கில் பயிற்சி மேற்கொண்டு சான்றிதழ்களை பெற்றனர்.




அருங்காட்சியங்களுக்கு நேரில் செல்வது இளம் மாணவர்களுக்கு அருங்காட்சியங்கள் பற்றிய அறிமுகத்தை வழங்குவதற்கு நிச்சயம் உதவும். இதனை கருத்தில் கொண்டு மதுரை மாநகரில் பள்ளி மாணவர்களை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகத்திற்குத் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு ஏற்பாடு செய்து அழைத்துச் சென்றிருந்தோம்.




ஏறக்குறைய 100 மாணவர்கள் இந்த அருங்காட்சியகப் பயணத்திற்கு நேரில் வந்து கலந்து கொண்டனர். இந்த அருங்காட்சியக பயணத்தில் தமிழ்நாடு தொல்லியல் துறையின் அதிகாரிகளில் ஒருவரான செல்வி காவியா அவர்கள் அருங்காட்சியத்தில் பாதுகாக்கப்படும் அரும்பொருட்கள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

டிசம்பர் மாதத்தில் தமிழ் மரபு அறக்கட்டளையின் இரண்டு ஆய்வு பயணங்கள் நிகழ்ந்தன. முதலாவதாக, மதுரையில் இருந்து தேனி, உத்தமபாளையம், கம்பம், கூடலூர், ஆண்டிப்பட்டி போன்ற பகுதிகளுக்கு நேரில் சென்று அப்பகுதிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களை நேரில் பார்வையிட்டு பதிவு செய்து வந்தது தமிழ் மரபு

அறக்கட்டளையின் குழு. அதனை அடுத்து டிசம்பர் 26 தொடங்கி தமிழகத்தின் தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், கோடியக்கரை, புஷ்பவனம் ஆகிய பகுதிகளில் நேரடி ஆய்வுக் களப்பணிக்காக தமிழ் மரபு அறக்கட்டளையின் குழு பயணம் செய்து அப்பகுதிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களையும் பராமரிப்பற்று பாதுகாப்பு பெற்று கிடக்கின்ற வழிபாட்டுச் சின்னங்கள், தொல்லியல் சின்னங்கள் ஆகியவற்றை பற்றிய செய்திகளை சேகரித்து அவற்றை செய்தி ஊடகங்களில் வெளியிட்டது.



வேதாரணத்தில் ஒரு கிராமத்தில் பொதுமக்கள் துணி துவைப்பதற்காக பயன்படுத்தி வந்த ஒரு கல். இது ஒரு சமணத் தீர்த்தங்கரர் சிலை என்று டாக்டர் ஜம்புலிங்கம் மற்றும் தோழர்கள் குறிப்பிட்டதை ஒட்டி அங்கு நேரில் சென்று அந்தச் சிலையை ஆய்வு செய்து அதனை தூய்மைப்படுத்தி கிராம தாசில்தாரிடம் அதனை ஒப்படைத்தது தமிழ் மரபு அறகட்டளை பன்னாட்டு அமைப்பு.

இப்படி பல்வேறு வகையில் வரலாற்று ஆர்வலர்களுக்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் பல செயல்பாடுகளையும் நிகழ்ச்சிகளையும் நவம்பர் மாதத்தில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு வழி ஏற்பாடு செய்து வழங்கியிருந்தோம்.



திருவள்ளுவருக்கு ஐரோப்பாவில் முதல் முறையாக இரண்டு ஐம்பொன் சிலைகளை நிறுவிய வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்தது. இந்த மாபெரும் சாதனையை தமிழ் மரபு அறக்கட்டளை பெருமையுடனும் மகிழ்வோடும் நினைவுகூருகிறோம்.

ஒவ்வொரு மாதமும் நிகழும் அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள திணை மாத இதழை வாசிப்பீர்.

தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இணைந்து தமிழ்ப்பணியாற்ற தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

அன்புடன்
முனைவர் க. சுபாஷிணி
(தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**திசைக் கூடல் - உரை நிகழ்ச்சி**

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 03/12/2022 | 5:00 PM | சனி | கீதா இளங்கோவன் | **மாதவிடாய் கற்பிதங்களும் உண்மைகளும்** https://youtu.be/0YvglG5QtWc |

திசைக் கூடல் நிகழ்வு #313




டிசம்பர் – 3, 2022 – சனி - மாலை 5:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/0YvglG5QtWc**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள் - காணொளி வெளியீடு


வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வரலாற்றுத்தகவல்களை துறை வல்லுநர்கள் வாயிலாக காணொளிகளாக ஆவணப்படுத்துவது தமிழ் மரபு அறக்கட்டளையின் தொடர்ச்சியான பணி. அந்தவகையில் இந்தமாதம் கீழ்கண்ட காணொளிகள் வெளியீடுகண்டன.













| உரையாளர் | தலைப்பு |
|---|---|
| தொல்லியல் ஆய்வாளர்<br>**முனைவர் நா. மார்க்சிய காந்தி** | **தமிழி எழுத்து வட்டெழுத்தாக மாறிய முறை விளக்கம்**<br>காணொளி : https://youtu.be/-X9b_lK8KOk |
| தொல்லியல் ஆய்வாளர்<br>**முனைவர் ஆ.பத்மாவதி** | **பாண்டியர்களின் வட்டெழுத்துக் கல்வெட்டுகள்**<br>காணொளி : https://youtu.be/jUp4xb96sBM |
| தொல்லியல் ஆய்வாளர்<br>**முனைவர் ஆ.பத்மாவதி** | **களப்பிரர் கால பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயில்**<br>காணொளி : https://youtu.be/MNNWw8S8UFY |
| தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர்<br>**முனைவர் க. சுபாஷிணி** | **கேரித் தீவுக்கு வந்த தமிழர்கள்**<br>காணொளி : https://youtu.be/tfNp7DWUBBM |
| தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர்<br>**முனைவர் க. சுபாஷிணி** | **மலாயாவின் முதல் தமிழ்ப் பள்ளிக்கூடம் எது தெரியுமா?**<br>**காணொளி : https://youtu.be/iqSxDhEVd10** |

## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

### மலேசியாவில் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி பயிலரங்கம்

டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் மலேசியாவில் பினாங்கு தொடங்கி பின்னர், கேரித்தீவு, கிள்ளான் பகுதிகளில் என நான்கு பள்ளிக்கூடங்களில் மாணவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி பற்றிய பயிலரங்கங்களைத் தமிழ் மரபு அறக்கட்டளையினர் வழங்கினோம். ஏறக்குறைய ஆயிரம் மாணவர்களும் பள்ளி ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டனர்.



215 மாணவர்கள் மற்றும் 40க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடனும் மனமகிழ்வுடனும் கலந்துகொண்டனர். மாணவர்கள் ஆர்வத்துடன் கேள்வி கேட்டு தமிழ் வரலாற்றை அறிந்து கொள்ள காட்டிய ஆர்வம் தமிழ் மரபு அறக்கட்டளைக்கு மேலும் உற்சாகமளிப்பதாகவும் எமது பணிகள் எமக்கு மன நிறைவை அளிப்பதாகவும் இருந்தது.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

### மலேசியாவில் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி பயிலரங்கம்



பயிலரங்கங்களில் பங்கேற்ற மாணவர்களுக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த ஆசிரியர்களுக்கும் குறிப்பாக முனைவர் சங்கர் மற்றும் திரு கார்த்திக் மற்றும் அவரது பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் பாராட்டுகளும் நல்வாழ்த்துக்களும்.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

### வட்டெழுத்து மற்றும் ஓலைச்சுவடி வாசிப்புப் பயிலரங்கம்

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் வட்டெழுத்து மற்றும் ஓலைச்சுவடி வாசிப்புப் பயிலரங்கம், டிசம்பர் 10, 11, 2022 ஆகிய நாட்களில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் அரங்கில் நடைபெற்றது.




முதல்நாள் கல்வெட்டுகளில் வட்டெழுத்து குறித்து கல்வெட்டு அறிஞர்கள் டாக்டர் மார்க்சிய காந்தி, டாக்டர் பத்மாவதி அவர்களும்; மறுநாள் ஓலைச்சுவடியியல் குறித்து தொல்லியல்துறை அறிஞர் ச. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் முனைவர் கோ.உத்திராடம் அவர்களும் பயிற்சி வழங்கினார்கள்.



## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

### வட்டெழுத்து மற்றும் ஓலைச்சுவடி வாசிப்புப் பயிலரங்கம்


வட்டெழுத்து மற்றும் கல்வெட்டுப் பயிற்சி – நிறைவு விழாவில் சிறப்புரையாற்றிய திரு ஆர் பாலகிருஷ்ணன் இ. ஆ. ப. அவர்கள் சிறப்புரை வழங்கி, தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகத்தால் வெளியிடப்படும் பேராசிரியர் ப.பாண்டியராஜா அவர்களது கணிதவியல் நூலை வெளியிட்டார். வருகின்ற ஜனவரி மாதம் சென்னை புத்தகத் திருவிழாவில் விற்பனைக்கு வரும் இந்த நூல் சமகாலச் சூழலில் தமிழில் அறிவியல் மற்றும் கணிதவியல் நூல்கள் மிகக் குறைவு என்ற குறையை நீக்கும்.



**2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்**

**மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியக வரலாற்று உலா**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் அருங்காட்சியகம், கண்காட்சிப் பிரிவின் முன்னெடுப்பில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகம் – பார்வையிடலும் விளக்கவுரையும் நிகழ்ச்சி என முனைவர். சுபாஷிணி ஒருங்கிணைப்பில் 17-12-2022, சனிக்கிழமை அன்று மதியம் 1:30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் மதுரை அரசுப்பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கேற்றார்கள்.




மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியக வரலாற்று உலாவில் பங்கேற்க 50க்கும் மேற்பட்ட சிறார்களும் 20க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் மதுரை நாயக்கர் மஹால் வளாகத்தில் கூடினர்.

**பள்ளி மாணவர்களின் கருத்து:** https://youtu.be/BQjcBxukX6o

## 2022 டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

### மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியக வரலாற்று உலா

மாணவர்களுக்கு அரண்மனை மற்றும் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள ஒவ்வொரு பொருட்களையும் விளக்கிய போது பேராவலுடன் ஒவ்வொரு விஷயத்தையும் குறிப்பு எடுத்துக் கொண்டார்கள்; கேள்விகள் கேட்டார்கள். மாணவர்களுக்கு அருங்காட்சியகம் செல்ல வேண்டும் அரும்பொருட்களைக் கண்டு அவற்றைப்பற்றி ஆராய வேண்டும், குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ் மரபு அறக்கட்டளை குழுவினர் வலியுறுத்தினோம்.



எங்களோடு தமிழக தொல்லியல் துறையின் கீழடி பகுதியில் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் முனைவர் பட்ட ஆய்வாளர் காவியா அவர்களும் இணைந்து கொண்டு மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் விளக்கம் அளித்தார். தமிழக தொல்லியல் துறைக்குத் தமிழ் மரபு அறக்கட்டளையின் நன்றி. இந்த அருங்காட்சியக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் நல்வாழ்த்துக்கள்.

**தமிழ் மரபு அறக்கட்டளையின் - டிசம்பர் மாத நினைவலைகள்**

**ஜெர்மன் அருங்காட்சியகத்தில் திருவள்ளுவர் சிலைகள் நிறுவிய 3ம் ஆண்டு நிறைவு**

2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜெர்மனியில் ஸ்டுட்கார்ட் நகரில் உள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் இரண்டு திருவள்ளுவர் திருவுருவச்சிலைகள் நிறுவப்பட்டது.



திருவள்ளுவருக்கு ஐரோப்பாவில் முதல் முறையாக இரண்டு ஐம்பொன் சிலைகளை நிறுவிய வரலாற்று சிறப்புமிக்க நாளில் ஐரோப்பிய தமிழர் நாள் கொண்டாட்டமும் தொடங்கியது. இந்த மாபெரும் சாதனையை நிகழ்த்தியதில் தமிழ் மரபு அறக்கட்டளை பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றோம்.

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

தமிழால் இணைவோம்!

---

தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

"கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

**நல்ல சிந்தனை:**

*கற்(று)அறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்*
*பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற*
*அறைகல் அருவி அணிமலை நாட!*
*நிறைகுடம் நீர்தளும்பல் இல்.*

- பழமொழி நானூறு

**பொருள்:** கற்றறிந்தார் கண்டவையெல்லாம் அடக்கம் ஒன்றுதான். கற்றறியாதவர் மறதியிலும் தம்மைத் தாமே புகழ்வர். தெளிவாகப் பாறையில் முழக்கத்துடன் நீர் கொட்டும் அருவியை உடைய நாட்டு வேந்தனே! நிறை குடத்தில் உள்ள நீர் தளும்பாது. சான்றோரும் அப்படித்தான்.